# வளமான எதிர்காலம்

**"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது அதனினும் அரிது;**

**கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறத்தல் அரிது".**

என்ற பொருள் பொதிந்த பாடல் வரிகளை இயற்றியவர் நமது அருமைத் தமிழ் மூதாட்டியார் ஔவையார் ஆவார். நமக்குக் கிட்டிய இவ்வாய்ப்பை நாம் எப்படிப் பயன்படுத்தலாம்? ஒரு வளமான எதிர்காலத்திற்காக நாம் எவ்வித நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்? இவையே நம்முள் எழும் கேள்விகள் ஆகும்.

யானையின் பலம் அதன் துதிக்கையில் இருப்பதைப் போல், மனிதனின் பலம் அவன் நம்பிக்கையில் உள்ளது. ஒரு வரமான எதிர்காலத்தை உண்டாக்க, தன்னம்பிக்கை பெரும் பங்காற்றுகிறது. அது ஒவ்வொருவருடைய வாழ்க்கை சூழலைப் பொருத்தே அமையும். ஒருவன் தன்னுள் தன்னம்பிக்கையை வளர்க்க, எடுக்கும் முயற்சி, கலந்துகொள்ளும் போட்டிகள் போன்றன எல்லாம் உதவிபுரியும். போட்டியில் பங்கேற்கும்போது தன்னம்பிக்கை வளர்வதோடு மற்ற போட்டியாளர்களை எதிர்த்துப் போட்டியிடும் துணிவும் அவன் அறியாமலேயே அவனுள் உண்டாகும். அவ்வேளையிலேயே என்னாலும் ஜெயிக்க முடியும் என்ற நம்பிக்கையும் உண்டாகும்.

தானம் கொடுக்கும் அரிய குணத்தை நாம் உண்டாக்கிக் கொண்டால் நம் எதிர்காலம் செம்மையாக அமையும் என்பது உறுதி. மற்றவர்களுக்குக் கொடுத்து அவர்களை மகிழ்விப்பதால் நாமும் மகிழ்ச்சி அடைவோம் என்பதை யாரும் மறுக்க இயலாது. ஆனால், அதே சமயத்தில் அறியாமையும் ஆணவமும் நம்மை ஆள இடங்கொடுத்தால் அதுவே நமது அழிவுக்கான ஆரம்பாகும். பிறருக்குக் கொடுத்தல் என்பது உயரிய குணமாகும். இந்தக் கொடுக்கும் குணத்தை நாம் வீட்டிலேயே துவங்காலம். வீட்டில் துவங்கியபின் சமுதாயத்திலும் தொடரலாம். எடுத்துக்காட்டாக, அனாதை இல்லத்திற்கோ, முதியோர் இல்லத்திற்கோ சென்று நாம் பயன்படுத்தாத பொருள்களைக் கொடுத்துவிடலாம். இது நாம் செய்ய வேண்டிய எளிய நல்ல செயலாகும்.

வளமான எதிர்காலத்திற்கு நல்ல குணங்கள் எவ்வளவு அவசியமோ, அதைப் போலத்தான் நல்ல பழக்கங்களும் அவசியமாகும். மேலும், கிணற்றுத் தவளையாக இல்லாமல் நம்மைச் சுற்றி என்னென்ன நடைபெறுகின்றன என்பதைப் பற்றியும் நாம் அறிய வேண்டும். இதற்குச் சிறந்த வழி, செய்திகள். செய்திகள் நம்மைப் பல விதங்களில் செம்மைப்படுத்துகின்றன. நாமும் செய்தித்தாளைப் படித்தோ வானொலியிலும் தொலைக்காட்சியிலும் வாசிக்கப்படும் செய்திச் சாரங்களைக் கேட்டோ, தற்போது உலகத்தில் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

பிறருடன் உறவாடுவதும் ஒரு சிறந்த எதிர்காலத்தைக் உண்டாக்கச் சிறந்த வழி. நாம் பிறருடன் உரையாடாமல், பழகாமல் தனிமனிதனாக வாழ்ந்தால் பிற்காலத்தில் உடன் பணிபுரிவோருடன் பழகுவது கடினமான செயலாகிவிடும். இந்தப் பழக்கத்தை நம் வாழ்க்கை முறையாக்க நாம் சமூக நிலையங்களில் அல்லது பள்ளியில் நடத்தப்படும் சில நடவடிக்கைகளில் பங்கேற்கலாம். இதனால் நாம் பலரையும் சந்திக்கலாம், அவர்களுடன் நன்கு பழகி உறவாடலாம்.

நம் எதிர்காலத்தை வளமான ஒன்றாக அமைத்துக்கொள்ள வேண்டுமானால் நாம் மேற்கூறப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். அவற்றைப் பின்பற்றினால் ஒரு வரமான எதிர்காலம் நிச்சயம் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

**வி.பிரவின்**
**Orchid Park Secondary School**
**Sec 4E1**